


தூத்துக்குடியில் காமராஜர் பிறந்தநாளையொட்டி அவரது சிலைக்கு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் தன் வாழ்நாள் முழுமைக்கும் எளிமையை கடைபிடித்து இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் நம் மனதில் தலைமுறை கடந்து வாழ்ந்து கொண்டிருக்கிற கர்மவீரர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் சட்ட மன்ற தொகுதி இரட்டையூரணி ஊராட்சியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் இந்நிகழ்வில் ஒன்றிய கழக செய லாளர் கே ஜே பிரவீன் , நகர் மன்ற தலைவர் ஆர் கே, கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், கீழக்கரை நகர மன்ற துணைத் தலைவர் ஹமீது சுல்தான், உட்பட கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்




மதுரை மாநகராட்சியில் சுகாதாரப் பணிகளை சரிவர மேற்கொள்ளாததை கண்டித்து அரசரடி பகுதி மக்கள் மாநகராட்சி அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



தேனி மாவட்டம் பழனி செட்டிபட்டி பேரூராட்சி சார்பாக மக்கள் குறை தீர்ப்பு சிறப்பு முகாம் பேரூராட்சி தலைவர் வழக்கறிஞர் மிதுன் சக்கரவர்த்தி தலைமையில் நடைபெற்றது. உடன் துணைத் தலைவர் மணிமாறன் . பேரூராட்சி செயல் அலுவலர் யோகா ஸ்ரீ. மற்றும் கவுன்சிலர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

### த.வெ.க. ஆட்சியில் – நெல்லை – ராதாபுரம்

# சார்பதிவாளர் அலுவலகம் நள்ளிரவில் திறப்பு!

## பொதுமக்கள் அதிர்ச்சி

*நெல்லை, ஜூலை 16-*

நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் செயல்பட்டு வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் தினந்தோறும் ஏராளமான பத்திரப்பதிவு நடைபெற்று வருகிறது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிலர் போலி ஆவணங்கள் மூலம் சொத்துக்களைப் பதிவு செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக, கடந்த ஏப்ரல் மாதம் மாவட்ட காவல் துறை குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் தற்போது நள்ளிரவு நேரங்களிலும் பத்திரப் பதிவு அலுவலகம் திறந்து சில நில புரோக்கர்கள் உள்ளே சென்று வருவதாகவும் லஞ்ச பணம் பெருமளவு பங்கு பிரிப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால், ஆள் மாறாட்டம் மற்றும் போலி ஆவணங்கள் மூலமாக நிலங்களைப் பறிமுதல் செய்யும் சட்டவிரோதப் பதிவுகள் அதிகமாக நடக்க வாய்ப்புள்ளதாக நில உரிமையாளர்களும் பொதுமக்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.


இந்த விவகாரம் தொடர்பாக பதிவுத்துறை உயர் அதிகாரிகளும், காவல்துறையும் உரிய விசாரணை நடத்தவேண்டும் என்று பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்வர் காமராஜர் 124வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விளக்குத்தூனில் அமைந்துள்ள அவரது திரு உருவசிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், இந்நிகழ்விற்கு தெற்குவாசல் பகுதிச் செயலாளர் ஜீவன் ரமேஷ்குமார் வரவேற்க கழக ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், பி.டி. மணிமாறன், ரவீந்திரன், சரவணன் அம்பலம் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.



ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்,வேப்பலோடை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு,நடைபெற்ற முப்பெரும் விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு கடந்த கல்வியாண்டில் சிறந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவ – மாணவியருக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சங்கீதா, சின்னராணி,பள்ளி தலைமை ஆசிரியர் சேகர், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முனியசாமி, பள்ளி மேலாண்மை குழு தலைவர் உமா சாந்தா, ஒன்றிய செயலாளர்கள் காசிவிஸ்வநாதன், சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, உதவி தலைமை ஆசிரியை ஜாய்ப்பிரியா, உள்ளிட்ட ஆசிரியர்கள் ஆசிரியைகள், மாணவமாணவிகள் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் வட்டம் பூசனூர் கிராமத்தில் கிராம தேவதை அங்காள ஈஸ்வரி அம்மன் திருக்கோவில் மண்டல பூஜை விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், ராமசுப்பு, அன்புராஜன், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய பொருளாளர் முனியசாமி, மாவட்ட பிரதிநிதிகள் செந்தூரப்பாண்டி, ஆதிசங்கர், ராமலிங்கம், புதுராஜா கழக நிர்வாகி கிருஷ்ணசாமி பாண்டியன் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை அருகே பள்ளி வகுப்பறையில் மாணவனுக்கு கத்திக் குத்து!

*சிவகங்கை, ஜூலை 16-*

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தாலுகா மல்லலில் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி உள்ளது .

இப்பள்ளியில் நிரஞ்சான் கிராமத்தைச் சேர்ந்த சஞ்சய் பிரசாத் என்பவன் 12 ஆம் வகுப்பு படித்து வருகிறான் . நேற்று காலை பள்ளிக்கூடத்திற்கு சஞ்சய் பிரசாத் வந்துள்ளான் . வகுப்பறையில் அவனுக்கும் சக மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட பிரச்சனையில் மாணவர்களுக்கிடையே தகராறு மோதல் ஏற்பட்டது .இதில் சஞ்சய் பிரசாத் உடலில் பலத்த காயங்களுடன் பள்ளியில் மயங்கி விழுந்தான்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை தலைமை அரசு மருத்துவமனை கல்லூரியில் மாணவர் சஞ்சய் பிரசாத் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டான். மாணவர் சஞ்சய் பிரசாத் உடம்பில். நான்கு இடங்களில் கத்திக்குத்து ஏற்பட்டுள்ளது.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலால் பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.

இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இச்சம்பவம் அப்பகுதியில் மிகுந்த பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களுக்கிடையே திடிரென்று ஏற்பட்ட மோதலுக்கான காரணம் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.




அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில் 15. 07. 2026 காலை 10.00 மணி அளவில் மதுரை மணியம்மை தொடக்கப் பள்ளியில் மன்றத்தின் துணைத் தலைவர் டி.வி. அழகர் தலைமையில் தமிழ்மொழிக் காவலர் மறைமலை அடிகள் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் “பெரியார் நெறியாளர்” பி. வரதராசன் மறைமலை அடிகளின் தமிழ்த் தொண்டினை சிறப்பாக எடுத்துக் கூறினார். நிகழ்வில் இலக்கிய மன்றப் பொருளாளர் க.வெ.நெடுஞ்சேரலாதன், துணைச் செயலாளர்கள் கரு. ஆறுமுகம், லெ.முருகேசன், செயற்குழு உறுப்பினர்கள்: இல.வெள்ளைச்சாமி, நிழற்பட வல்லுநர் ரெ. கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளர்கள்: மாமன்ற மேனாள் உறுப்பினர் கா.ரா. முருகேசன், தல்லாகுளம் சுகுமார், கிருஷ்ணசாமி ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.